# IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.

## RANIPET DISTRICT.

## DEPOSITION OF WITNESS
## SC.No.42/2025 - PW-10

| | |
|---|---|
| Name | திருமதி. ரெஜீனா |
| Husband/Father Name | பிரின்ஸ் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 55 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2021 அன்று பணியில் இருந்த போது அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண்.70/2021 வழக்கில் இறந்து போன மகேஷ் (எ) மணிகண்டன், வயது 23, ஆண் என்பவரது பிரேதத்தை காவலர் எண்.335, திரு. சதிஷ்குமார் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு மாலை 04.30 மணியளவில் பிரேத கூறாய்வு துவங்கப்பட்டு மாலை 05.30 மணியளவில் நிறைவுப்பெற்றது.

இறந்தவரின் உடல் முழுவதும் விரைப்பு தன்மை காணப்பட்டது. அவரை பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

**வெளிப்புற காயம் :**

1. வலது புறம் தலை மற்றும் முகம் நொறுங்கிய நிலையில் காணப்பட்டது.

2. முக்கு எலும்பு உடைந்திருந்தது.

**உள் பரிசோதனை செய்ததில் :**

1. Hyoid Bond மற்றும் விலா எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது.

2. வயிற்று பகுதியில் சிறிய அளவில் திரவம் இருந்தது.

3. நுரையிரலின் இரண்டு பக்கங்களிலும் பல இடங்களில் இரத்த கசிவு காணப்பட்டன.

4. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெளிர்ந்த நிலையில் காணப்பட்டன.

5. வலது பக்க மண்டை ஓட்டின் எலும்புகள் அனைத்தும் நொறுங்கிய நிலையில் காணப்பட்டன.

6. வலது பக்க முக எலும்புகள் அனைத்தும் நொறுங்கிய நிலையில் உடைந்து காணப்பட்டன.

உள்ளுறுப்புகள் இரசாயண பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது.

காயத்தின் தன்மை அவரது வலது பக்க முகம் மற்றும் தலை எலும்புகள் அனைத்து நொறுக்கப்பட்டு சிதைந்துள்ளன. அவர் அதிகப்படியான இரத்த போக்கு காரணமாகவும், வலது பக்க மண்டை ஓட்டின் தலை மற்றும் முக எலும்புகள் மற்றும் அதனுடைய பகுதிகள் நொறுங்கி, நசுங்கிய நிலையில் காணப்பட்டது இதனால் ஏற்பட்ட அதிக இரத்த போக்கின் காரணமாகவும் அவர் இறந்திருக்க கூடும் என்று பிரேத பரிசோதனை அறிக்கை அளித்தேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.18 17:04:51 +0530

II Additional District and Sessions Judge,

Arakkonam.